**26.06.2025**

**MCOP.278/2023**

**<u>ம.சா.1. எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

விபத்தில் இறந்துபோன நபர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது தாயார். விபத்து எப்போது, எந்த தேதியில், எந்த இடத்தில் நடந்தது என்றால் 31.12.2022-ல், காலை 08.00 மணியளவில் கீழையூர் கடைத்தெரு அருகில் விபத்து ஏற்பட்டது. எனது தாயாருக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 80 வயது இருக்கும். எனது தாயாரின் வயதை பொறுத்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் என்ன வேலை பார்த்தார் என்றால் விவசாயம். மாத வருமானம் ரூ.10,000/- வருமா என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்தியது என்ன வண்டி என்றால் அரசுப்பேருந்து. பேருந்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து ஏற்பட்ட நாளில் அந்த பேருந்தானது எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றது என்றால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது. விபத்தில் அடிபட்ட எனது தாயாரை எந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் நாகப்பட்டிணத்தில் உள்ள அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எந்த வண்டியில் அழைத்து சென்றேன் என்றால் 108 ஆம்புலன்ஸ்-ல். எனது தாயார் அடிபட்ட இடத்திலேயே இறந்து விட்டாரா அல்லது மருத்துவமனையில் இறந்து விட்டாரா என்றால் மருத்துவமனையில் இறந்து விட்டார். விபத்து நடந்த இடம் மக்கள் கூட்டம் அதிகம் உள்ள பகுதி என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிர்மனுதாரரிடம் இருந்து நஷ்ட ஈடு அதிகமாக பெற வேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:- இல்லை.</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.